**செ. கு. எண்: 146** **நாள்:3.12.2010**

# <u>ஆசிரியர்கள் பொறுப்புடன் செயல்பட்டு சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள்</u>

**பள்ளிக்கல்வித்துறையில் 1103 பேர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:**

இன்று பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், சிறப்பு ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் மற்றும் இசை ஆசிரியர்கள் 851 பேருக்கும், கருணை அடிப்படையில் 62 பேருக்கும் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 190 தட்டச்சர்களுக்கும், ஆக மொத்தம் 1103 பேர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்படுகின்றன இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையின் கீழ், தமிழகம் கல்வித் துறையின் வளர்ச்சியில், இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பள்ளிக் கல்வித் துறை, தரமான கல்வியை வழங்கி வருகிறது.

2006ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் அரசு அமைந்த பின்னர் இதுவரை தமிழகத்தில் 4 இலட்சத்து 80 ஆயிரத்து 466 பேர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது. இதில் பள்ளிக் கல்வித் துறையில் மட்டும் 57,104 பேர்களுக்கு பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது. பள்ளிக்கல்வி இயக்ககத்தில், இடைநிலை ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர், ஆசிரியர் பயிற்றுநர், முதுகலைப்பட்டதாரி ஆசிரியர், சிறப்பு ஆசிரியர்கள், தொழிலாசியர்கள், கணினி ஆசிரியர்கள், விவசாய ஆசிரியர்கள் என 27915 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தொடக்கல்வி இயக்ககத்தில் 26451 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் விரிவுரையாளர்களாக 248 பேர்களும், கருணை அடிப்படையில் உதவியாளர்கள், தட்டச்சர்கள் என 699 பேர்களும், அரசு தேர்வாணையத்தின் மூலம் 741 பேர்களுக்கும், ஆகமொத்தம், கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக்கல்வித்துறையில் மட்டும் 57104 பேர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமல்ல, கடந்த அதிமுக ஆட்சியில் 45,987 ஆசிரியர்கள் தொகுப்பூதியத்தில், அதாவது அவர்கள் பெறவேண்டிய ஊதியத்தில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு ஊதியம் மட்டும் பெறும் நிலையில் நியமனம் செய்யப்பட்டு இருந்தனர். 2006ஆம் ஆண்டில் தலைவர் கலைஞர் தலைமையிலான கழக அரசு பொறுப்பேற்றவுடன் மேற்படி 45,987 ஆசிரியர்களுக்கும் 1.6.2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கி, ஒவ்வொரு ஆசிரியரும் தாம் பெற்று வந்த ஊதியத்தை விட மூன்று மடங்கு அதிகம் பெற்று மகிழத்தக்க வகையில் ஆணையிட்டு நிறைவேற்றி தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தமிழ்நாட்டில் 2010-11 கல்வியாண்டிற்கு **ரூ.10147.56 கோடி பள்ளிக்கல்வித்துறைக்கு** நிதி ஒதுக்கீடு செய்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ள அரசு கலைஞர் அரசு. கடந்த நான்கரை ஆண்டுகளில் மட்டும் தமிழ்நாட்டில் **569** புதிய துவக்கப் பள்ளிகள் தொடங்கப்பட்டு உள்ளன. **2726** ஆரம்ப பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. **645** நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. **570** உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. மேலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கும், உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கணினிகள் வழங்கப்படுவதும் தமிழகத்தில் தான். அதுமட்டுமல்ல, ஊராட்சி ஒன்றிய மற்றும் அரசு நடுநிலைப் பள்ளிகளுக்கும் தமிழகத்தில் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. கணினிக் கல்வியை மேம்படுத்தும் நோக்கத்தில், தமிழகத்தில் **1686** கணினி பயிற்றுநர்கள் பள்ளிகளில் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைவர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசில் எல்லாத் துறையும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தமிழகத்தில் கல்வித்துறை இந்திய அளவில் ஒரு முன்மாதிரி மாநிலமாக செயல்பட்டுவருகிறது. கடந்த அதிமுக ஆட்சியில் இருந்த பணிநியமன தடைச் சட்டம், எஸ்மா, டெஸ்மா என்ற அடக்கமுறை சட்டங்கள் கலைஞர் ஆட்சியில் தான் ரத்து செய்யப்பட்டன. கடந்த ஆட்சியில் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் தங்களது உரிமையைக் கூட கேட்க முடியாத நிலை இருந்தது. சுமார் **1** இலட்சத்து **70** ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களையும் ஒரே நாளில் பணிநீக்கம் செய்த ஆட்சி கடந்த ஆட்சி. இந்த துயரச் சம்பவத்தில் அதிர்ச்சி அடைந்து பல ஆசிரியர்கள் இறந்த துக்கமான நிகழ்ச்சிகளும் கடந்த ஆட்சியில் ஏற்பட்டது. கடந்த **2006**ஆம் ஆண்டு தேர்தலின் போது கலைஞர் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதியின்படி, அந்த கருப்பு சட்டங்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டு, ஆசிரியர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்ற ஆட்சி தலைவர் கலைஞர் ஆட்சி.

இன்று பணிநியமனம் பெற்றுள்ள அனைவரும் தங்கள் பொறுப்புக்களை உணர்ந்து சிறந்த மாணவர்களை உருவாக்குகின்ற வகையில் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்று உங்களை எல்லாம் அன்புடன் கேட்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இந்நிகழ்ச்சியில், உடன் மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, உயர்கல்வித்துறைச் செயலாளர் திரு. கே. கணேசன், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் முனைவர் பி.ஏ. இராமையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**